**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No. 108/2022</u>**

**<u>வழக்கு சாட்சி PW-5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்து கார்த்திகா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பாலமுருகன் | தொழில் | : | 108 ஆம்புலன்ஸ் ஊழியர் |
| கிராமம் | : | நாமக்கல் | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 11.02.2026

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது நாமக்கலில் குடியிருந்து வருகிறேன். நான் 108 ஆம்புலன்ஸில் ஊழியராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 பாலமுருகன் என்னுடைய அப்பா. அ.சா.2 பொன்மணி என்னுடைய அம்மா. 05.09.2020 அன்று அதிகாலை 04.00-05.00 மணியளவில் எனது அப்பா கோவில் பக்கம் லாரியில் லோடு இறக்கி விட்டு அங்கேயே படுத்து தூங்கி விட்டார். நானும், எனது அம்மாவும் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தோம். அந்தசமயத்தில் பக்கத்து வீட்டுக்காரர்கள் எனது அம்மாவை எழுப்பி, எனது அப்பாவை யாரோ அடிப்பதாக தகவல் சொன்னார்.

நானும், எனது அம்மாவும் எழுந்து வேகமாக ஓடிச்சென்று பார்த்தபோது, என்னுடைய சித்தப்பா மாரியப்பன் என்பவரும், அவரது 2 மகன்களும் எனது அப்பாவை அடித்து கொண்டிருந்தார்கள். என்னுடைய சித்தப்பா மாரியப்பன் பெல்ட்டால் எனது அப்பாவின் தலையில் அடித்தார். நாங்கள் எனது அப்பாவை பார்த்தபோது, தலையில் இரத்தம் வந்து கொண்டிருந்தது. நானும், எனது அம்மாவும் எதிரிகள் எனது அப்பாவை அடிக்கும் போது தடுத்தோம். அப்போது எதிரி மாரியப்பன் பெல்ட்டால் எனது முதுகில் அடித்தார். எனது அம்மாவின் கை மற்றும் முதுகில் எதிரி மாரியப்பன் பெல்ட்டால் அடித்தார். எதிரி மனோஜ் எனது அம்மாவை கட்டையால் அடிக்க வந்தார்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என்னையும், எனது அப்பா, அம்மா ஆகியோர்களையும் தனியாக அழைத்து கொண்டு வந்தார்கள். எனது அப்பாவிற்கு தலையிலிருந்து அதிகமாக இரத்தம் வந்து கொண்டிருந்தது. கையை தூக்க முடியவில்லை என்று எனது அப்பா சொன்னார், நாங்கள் பார்த்தபோது எனது அப்பாவிற்கு இடது கை ஒடிந்திருந்தது. நானும், எனது அம்மா மற்றும் எனது சித்தப்பா மாரிச்செல்வம் ஆகியோர்கள் காயம்பட்ட எனது அப்பாவை மலைச்சாமியின் ஆட்டோவில் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போனோம். அங்கு எனது அப்பாவிற்கு முதலுதவி சிகிச்சை அளித்தார்கள். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். தென்காசி அரசு மருத்துவமனையில் 15 நாட்கள் எனது அப்பா சிகிச்சையில் இருந்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

சாட்சி நாமக்கல் முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. Gowsalya, Assistant Prgrammer முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாமக்கல் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.12 16:59:48 +0530